செ.வெ.எண்.31 நாள்.22.01.2018

**குஜராத் மாநிலம் அகமதாபாதில் நடைபெற்ற தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் இளம் விஞ்ஞானி பட்டம் வென்ற மாணவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார்**

*************

குஜராத் மாநிலம் அகமதாபாதில் டிசம்பர் 27 முதல் 31 முடிய 5 நாட்கள் அறிவியல் நகரத்தில் நடைபெற்ற 25–வது தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டில், தேசிய அளவில் தேர்வான ஆய்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அதில் தமிழ்நாட்டில் இருந்து தேர்வான 30 ஆய்வறிக்கைகளும், அதன் குழு தலைவர்களும் கலந்து கொண்டனர். நம் காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த சதுரங்கப்பட்டினம் அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளியின் ஆய்வறிக்கை, 30 ஆய்வறிக்கைகளில் ஒன்றாக தேர்வாகி, ஆய்வறிக்கையின் குழுத்தலைவர் மாணவி V.ஸ்ரீசக்தி, அகமதாபாதில் நடைபெற்ற தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் கலந்து கொண்டு இளம் விஞ்ஞானி எனும் விருதைப் பெற்று தமிழகம் திரும்பினார்.

“மீன்பிடி தொழிலில் நவீன தொழில்நுட்பத்தின் பங்கு” என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு இளம் விஞ்ஞானி விருது பெற்ற மாணவிகள் V.ஸ்ரீசக்தி, G.அமுதா, S.கலையரசி, J.ஜீவதாரணி, M.திவ்யா, வழிகாட்டி ஆசிரியை திருமதி.G.மாலதி மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட NCSC ஒருங்கிணைப்பாளர் திரு.S.ஜாகிர் உசேன் அனைவரும் மாவட்ட ஆட்சியர் அவர்களை சந்தித்து வாழ்த்துகளை பெற்றனர்.

செய்தி வெளியீடு,<br>
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,<br>
காஞ்சிபுரம்.